# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 08 வியாழக்கிழமை (24-10-1996) UTHAYAN A Lively Nationel Tamil Daily கதிர் 250


# நாவற்குழிச் சம்பவம் தொடர்பாக
# 7 சிப்பாய்கள், 2 பொலீஸார் கைது!

## விளக்க மறியலில் தடுத்து வைக்க யாழ். மாவட்ட நீதிபதி உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 24

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தியும் அவரின் தாயார், தம்பியார் மற்றும் அயலவர் ஆகியோர் மர்மமான முறையில் காணாமற் போன பின்னர் புதைகுழிகளிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏழு இராணுவத்தினரும் இரு பொலீஸாரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். மாவட்ட நீதிபதி நமசிவாயம் அருள்சாகரன் நேற்று உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம்— நாவற்குழி எல்லையில் கண்டி வீதிக்குச் சமீபமாக — செம்மணி வீதிக்கு அருகில் — இராணுவக் காவலரண்களுக்கு நெருக்கமான பிரதேசத்தில் — மூன்று புதைகுழிகளில் இருந்து இந்த நால்வரின் சடலங்களும் நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

சம்பந்தப்பட்ட நால்வரும் காணாமல் போன சம்பவம் நிகழ்ந்து அடுத்த சில நாள்களில் மேற்படி இராணுவத்தினரும் பொலீஸாரும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு இடம் மாற்றம் செய்யப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேத பரிசோதனைக்காக சடலங்கள் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், ஒக். 24

புதைகுழியில் இருந்து உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட கிருஷாந்தி மற்றும் மூவரினதும் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

இந்த விடயம் நேற்று யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி என். அருள்சாகரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது—

இந்தச் சடலங்கள் மிகவும் உருக்குலைந்த நிலையில் இருப்பதால் இங்கு பிரேத பரிசோதனை செய்ய முடியாத நிலை உள்ளதாகவும், கொழும்பில் பிரேத பரிசோதனை செய்து வைத்திய அறிக்கையைப் பெறலாம் எனவும் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் என். விமலகாந்தன் நீதிபதியிடம் சமர்ப்பித்தார்.

இதனையடுத்து மேற்படி நான்கு சடலங்களையும் மேலதிக பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

மாணவி கிருஷாந்தியினதும் அவரது தாயாரினதும் சகோதரனினதும் சடலங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சடலங்கள் புலிகளால் ஒப்படைப்பு

மட்டக்களப்பு ஒக். 24

மட்டக்களப்பு மாவட்டம், மாவடிவேம்பு பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரில் இருவரின் சடலங்கள் விடுதலைப் புலிகளினால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த மோதலின் போது கொல்லப்பட்ட படையினரில் இருவரது சடலங்களை புலிகள் கைப்பற்றி திரும்பினர்.

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லாத மயிலவெட்டுவானுக்கு செஞ்சிலுவைச்சர்வதேசக்குழு அதிகாரிகள் சென்று விடுதலைப் புலிகளிடம் சடலத்தை பெற்று வந்து படையினரிடம் ஒப்படைத்தனர்

(மற்றும் ஒரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

(இ-3)

## சொந்த ஆயுதங்களுடன் குடாநாடு செல்ல தமிழ் கட்சி தலைவர்கள் மறுப்பு

கொழும்பு, ஒக். 24

தற்பொழுது கொழும்பில் தங்கி உள்ள ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரையும் ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் யாழ்ப்பாணம் செல்லுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் தமது சொந்த ஆயுதங்களுடன் அங்கு செல்ல ஈ.பி.டி.பி. மற்றும் புளொட் தலைவர்கள் மறுத்துவிட்டனர்.

இந்த இரு கட்சிகளின் தலைவர்களும் சமீபத்தில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இவர்களை யாழ். செல்லுமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார்.

அங்கு சென்று மக்களின் தேவைகளைக் கவனிக்கும்படி ஜனாதிபதி கோரினார்.

அவர்களின் தனிப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதரகத்துக்கு அருகில் வெற்றுக் குண்டு

கொழும்பு, ஒக். 24

கண்டியில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு அருகில் வெற்றுக் குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து- கண்டி நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தலதா மாளிகை அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பு முன்னேற்பாடாக, புதிதாக வந்து குடியேறுபவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

வீதிரோந்துப் பணிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## அரசுடன் அமைச்சர் அஷ்ரப் முரண்பட காரணம் என்ன?

மட்டக்களப்பு, ஒக். 24

அம்பாறை மாவட்டத்தில் ஒலுவிலில் துறைமுகமும், கடற்றொழில் பயிற்சி நிலையமும் அமைக்கும் விடயத்திலேயே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப்புக்கும், அரச உயர்மட்டத்துக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

சகல வசதிகளுடன் ஒலுவிலில் துறைமுகம் அமைக்கவும்-

அதற்கு முன்னோடியாக ஒலுவிலில் கடற்றொழில் பயிற்சி நிலையமொன்றை அமைக்கவும் — அமைச்சர் அஷ்ரப் நடவடிக்கை எடுத்து வந்தார்.

இந்தப் பயிற்சிநிலையத்தை திருமலையில் அமைக்கவே அரச உயர் பீடம் விரும்பியதாகவும் —

இதை அஷ்ரப் ஆட்சேபித்தார் என்றும்—

இதன் விளைவாகவே அரசுக்கும் — அஷ்ரப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி முடிவு செய்ய நேற்று கட்சியின் அரசியல் குழு கூடவிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது

மற்றும் ஒரு செய்தி 7 ஆம் பக்கத்தில். (இ-3)

## கைதான யாழ். அதிகாரி மீது வழக்கு தொடருவதா?

### சட்டமா அதிபர் பரிசீலனை

கொழும்பு, ஒக். 24

யாழ். அரச அதிபரின் இணைப்பு அதிகாரியாகக் கடமையாற்றிய கந்தையா மருதவாணர் மீது வழக்குத் தொடுப்பதா? இல்லையா? என்பது குறித்து சட்டமா அதிபர் பரிசீலனை செய்வதாக உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி வவுனியா பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இவர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

1993 ஆம் ஆண்டு முதல் யாழ். அரச அதிபருக்கு இலங்கை அரசால் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களில் ஒரு பகுதி விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்க இவர் உதவியதோடு, உடந்தையாகவும் இருந்தார் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது விடுதலை வேண்டி அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த 9 ஆம் திகதி நீதியரசர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னைய நேரத்தை அனுசரிக்க குழு சிபார்சு

கொழும்பு, ஒக். 24

மீண்டும் பழைய நேரம் அனுசரிக்கப்பட வேண்டும் என்றும் —

தேவைப்பட்டால் நேரத்தை அரை மணித்தியாலம் முந்தி வைக்கலாம் என்றும் — நேர மாற்றம் தொடர்பாக பரிசீலனை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட குழு சிபார்சு செய்துள்ளது.

இலங்கையில் மின்வெட்டு அமுலுக்கு வந்ததை அடுத்து மின்சாரப் பாவனையை மீதப்படுத்தும் நோக்கத்துடன் இலங்கையின் நேரம் ஒரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எமது ஸ்தாபனத்தில் பாடசாலை "ரைகள்" பிறின்ரிங் செய்வதற்குப் பெண்பிள்ளைகள் தேவை.
உடன் விண்ணப்பிக்கவும்.

**வசந்தா பிறின்ரிங்**
42, கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(8932)

## புதிய பேராதனை இன்ஸ்ரிரியூட்,
கொக்குவில்.

வணிகப் புள்ளிவிவரவியல்

**A/L 97**

அலகு **4** — மைய நாட்டம்
ஆரம்பம்: சனி காலை **9-30** மணி.
அலகு **5** — நிகழ்தகவு
ஆரம்பம்: புதன் மாலை **5-00** மணி.

தூய கணிதம் **A/L 96**

புள்ளிவிவரவியலும், நிகழ்தகவும்.
ஆரம்பம்: ஞாயிறு காலை **9-30** மணி

(43322)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கிருஷாந்தி குமாரசாமி

எமது கல்லூரி உயர்தர வகுப்பு (விஞ்ஞான பிரிவு) மாணவி செல்வி கிருஷாந்தி குமாரசாமியினதும் அவரது தாயார் திருமதி இராசம்மா குமாரசாமி. சகோதரன் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரினதும் அகால மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அன்னாரின் சகோதரிக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னார்களது ஆத்மாக்கள் சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்.

யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
24 - 10 - 96

(சி/ 3336)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இராசம்மா குமாரசாமி

யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி. இல் கடந்த பல ஆண்டுகளாக ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திருமதி இராசம்மா குமாரசாமி அவர்களது அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் மகத்தான ஆசிரியச் சேவை, கல்விக் கருவூல நுழைபுலம், பாடறிந் தொழுகு பண்பு, கடமையில் கண்ணியம் ஆகியன எம் நெஞ்சை நெகிழ்க்கின்றன. இவரோடு அகாலமரணம் எய்திய இவரது மகள் செல்வி கிருஷாந்தி, மகன் பிரணவன் அயலவர் திரு. சி. கிருபாமூர்த்தி ஆகியோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்

பாடசாலை அபிவிருத்திச் சபையினர்
யா/ கைதடி முத்துக் குமாரசுவாமி
மகாவித்தியாலயம்,
கைதடி.

(43326)

## கண்ணீர் அஞ்சலி

முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலய உப அதிபரான

**திருமதி இராசம்மா குமாரசாமி**

அவர்களினதும், அவரது மகள்

**கிருஷாந்தி**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி A/L 96 மாணவி)

மகன் **பிரணவன்**

(பரியோவான் கல்லூரி A/L 97 மாணவன்)

அயலவர் **கிருபாமூர்த்தி**

(காரியாலய உதவியாளர் தெ மே. ப. நோ. கூ. சங்கம், கைதடி)

ஆகியோரின் அகாலமரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னார்களது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மேற்கு சனசமூக
நிலையத்தினரும், குமரன்
விளையாட்டுக் கழகத்தினரும்

கைதடி மேற்கு
கைதடி.

(43324)

## சமய சந்நிதிகளில்

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் நடத்தும் நிகழ்வில்—

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நாளை நடைபெறும்.

(ஆ)

பருத்தித்துறை, தம்பசிட்டி அருள்மிகு மகாமாரி அம்மன் ஆலயத்தில் இம்முறை முதல் தடவையாக கேதாரகௌரி விரத அபிஷேக, பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

(அ-4)

## பெற்றோரின் அவசர கலந்துரையாடல்

நாவற்குழியில் காணாமற் போய் சடலமாக மீட்கப்பட்ட செல்வி குமாரசாமி கிருஷாந்தி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் மாணவி.

அவரைப் போலவே அவச்சாவடைந்த அவரது சகோதரன் குமாரசாமி பிரணவன், யாழ். பரியோவான் கல்லூரியின் மாணவன்.

இந்த மர்ம மரணங்களைக் கண்டித்து வகுப்புப் பகிஷ்கரிப்பில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்ற கருத்துப் பெற்றோரிடைநிலவுகிறது.

இது சம்பந்தமாக ஆராய்வதற்காக பரியோவான் கல்லூரியின் ஆண்டு 11, அதற்கு மேற்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள் இன்று அவசர கலந்துரையாடலை நடத்துகின்றனர்.

கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு (பழைய நேரம்) நடைபெறும் இந்த அவசர கலந்துரையாடலுக்குத் தவறாது வருமாறு பெற்றோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## நூலக வாரம்

சுவாமி விவேகானந்தரின் யாழ். விஜய நூற்றாண்டு முன்னோடி நிகழ்ச்சித் தொடரில் ஒரு நிகழ்வாக, புலோலி பிரதேச சபையும் பருத்தித்துறைஸ்ரீ ராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமமும் இணைந்து நடத்தும் நூலக வாரம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை புலோலி நூலகத்தில் நடைபெறும்.

நூலக வாரமுடிவில் சேவாச்சிரமம் வாசகர்களுக்கு விமர்சனப் போட்டி ஒன்றினையும் ஒழுங்கு செய்துள்ளது.

## விரிவுரைகள்

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் மாலை நேர உயர் தேசிய கணக்கியல் டிப்புளோமா 2 ஆம் ஆண்டு 3 ஆம் ஆண்டு, 4 ஆம் ஆண்டு பயிற்சி நெறிகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மேற்படி நிறுவனம் இயங்கும் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

## பௌதிகவியல்

**1996**
**G.C.E. A/L**
பரீட்சையின்
**புள்ளி வழங்கல் திட்டம்**
By
இராஜேஸ்வரன்
வெள்ளி மு.ப. **11** மணி
**D.M.I.**
யாழ்ப்பாணம்

(43331)

## 4 மாணவர்கள் கடலுக்குப் பலி

ஹெந்தளைபிகிடிபுர கடற்கரையில் குளிக்கச் சென்ற தமிழ் மாணவர்கள் நால்வர் நீரில் மூழ்கி இறந்தனர்.

தெமட்டகொட விபுலாநந்த வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆண்டு -10 மாணவர்கள் 14 பேர் பாடசாலையில் நடைபெற்ற சரஸ்வதி பூஜை நிகழ்வுக்குப் பின்னர் பொழுதுபோக்குக்காகக் கடலுக்குக் குளிக்கச் சென்றனர்.

இவர்களில் ஐவர் நீர்சுழியினால் இழுத்துச் செல்லப்பட்டனர் இவர்களில் ஒருவர் காப்பாற்றப்பட்டார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வல்லிபுரம் சின்னம்மா

நல்லூரில் வசித்த காலஞ்சென்ற வல்லிபுரத்தின் மனைவி சின்னம்மா 16 - 10 - 96 அன்று வன்னியில் இறைபதம் எய்திவிட்டார்.

இவர் நேசம்மா, கந்தசாமி, காலஞ்சென்ற செல்லத்தம்பி, சுந்தரேஸ்வரன், அருளானந்தம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தையா, ராஜேஸ்வரி, பரமேஸ்வரி, தயாளகுணவதி, கமலாதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. கந்தசாமி
ச. சிங்கரட்ணம்

23/14 முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(43332)

### நடராசா செல்வராசா
(ஓய்வு பெற்ற உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள களஞ்சியப் பொறுப்பாளர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நடராசா செல்வராசா 22-10-96 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் அருந்ததியின் அன்புக் கணவரும், சூரியகுமார், உருத்திராதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், பத்மசீலன் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி), இரத்தினேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், திருமதி ரதிதேவி இந்திரராசாவின் சகோதரரும், ந. சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற பொதுமுகாமையாளர், இ. போ. ச. கோண்டாவில்), ந. சிவராசா (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் சிவதர்சினி, சுதர்சன், சகீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 23-10-96 புதன்கிழமை நடைபெற்றன.

தகவல்:
செ. அருந்ததி
(மனைவி)

மணியக்காரலேன்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(8933)

### செல்வி சிவக்கொழுந்து சிவராஜி

ஒட்டுவெளி மிருசுவிலை பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சிவக்கொழுந்து சிவராஜி 22 - 10 - 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து (இளைப்பாறிய ஆசிரியர்) கனகபூமணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சிவஞ்ஞானதேவி, சிவஞ்ஞானராஜா (டோகா), சிவமலர் (ஆசிரியர், மருதங்குளம் அ. த. க பாடசாலை) சிவரதி, சிவகுமாரி, (ஆசிரியர், வேம்பொடுகேணி அ. த. க பாடசாலை) சிவலலிதா, சிவகலா, சிவகவிதா ஆகியோரின் அன்புச்சகோதரியும், யோகராசாவின் (சவூதி) மைத்துனியும், துசியன், மிதுசா ஆகியோரின் சித்தியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் அன்னப்பிள்ளையின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-10-96 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஒட்டுவெளி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதீ கனகபூமணி
(தாய்)

ஒட்டுவெளி,
மிருசுவில்.

(43317)

### செல்வி சுந்தரம் பூரணம்

மீசாலை வடக்கு வேம்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சுந்தரம் பூரணம் 22-10-96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் – செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகளும், விநாயகமூர்த்தி (ஆசிரியர், யா/சாவகச்சேரி, இந்துக் கல்லூரி) அவர்களின் சகோதரியும், சிவக்கொழுந்து (ஆசிரியர், மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்) என்பவரின் மைத்துனியும், நாகநந்தினி, நந்தகுமார், நந்தரூபி (யாழ். பல்கலைக் கழகம்–நுண்கலைப் பீடம்), நாகசோதி, நந்தகோபன், நாகரோகினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-10-96 புதன்கிழமை வேம்பிராய் மயானத்தில்நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சு. விநாயகமூர்த்தி
(ஆசிரியர்)

மீசாலை வடக்கு,
வேம்பிராய்.

(C/3335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்,

# சட்டசபை உறுப்பினர் விடுதிக்கு அருகில் கார்க் குண்டு வெடிப்பு!

## ஸ்ரீநகரில் இருவர் பலி; நால்வர் காயம்

ஸ்ரீநகர், ஒக். 24

காஷ்மீர் மாநிலத்தில் பலத்த பாதுகாப்புகள் நிறைந்துள்ள ஸ்ரீநகர் பகுதியில் நேற்றுக்காலை கார்க் குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றது. முதலில் கிடைத்த தகவல்களின்படி இருவர் பலியாகியும் நால்வர் காயமடைந்தும் உள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற மாநில சட்டசபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் தங்கும் விடுதி அருகே இக் கார்க் குண்டு வெடிப்பு இடம் பெற்றது.

6 ஆண்டுகள் மத்திய அரசின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த இம்மாநிலத்துக்கான தேர்தல்கள் இருவாரங்களுக்கு முன்னரே நடைபெற்று தேசிய மகாநாட்டுக் கட்சியின் தலைவரான பாருக் அப்துல்லா முதல்வரானார்.

காஷ்மீருக்கு தனிநாடு கோரி முஸ்லிம் போராளிகளால் நடத்தப்பட்டு வரும் கிளர்ச்சிகளால் இதுவரை 18 ஆயிரம் பேர் அந்த மாநிலத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தக் கார்க்குண்டு வெடிப்பானது மாநிலத்தில் அமைதியை உருவாக்க பாருக் அப்துல்லா எடுக்கும் முயற்சிகளுக்கு ஓர் எச்சரிக்கைச் சமிக்ஞையாக அமைந்துள்ளது என்று பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-10)

## ஆந்திராவில் வெள்ளத்துக்கு 300 பேர் பலி

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக இறந்தோர் எண்ணிக்கை 300- க்கு மேல் உயர்ந்துள்ளது.

ஆயிரக் கணக்கான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குஇடம்பெயர்ந்துள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் மட்டும் சுமார் 11 இலட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## புருண்டி, றுவாண்டா படைகள் ஸயருக்குள்!

### அகதிகளாக மக்கள் வெளியேற்றம்

ஸயரான் கிழக்குப் பகுதிக்குள் சுமார் இரண்டாயிரம் புருண்டி, றுவாண்டாப் படைகள் நுழைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு ஸயரில் ஹுட்டு இன மக்களுக்கும் ருட்ஸி இன மக்களுக்கும், இடையில் நடைபெற்றுவரும் இனச் சண்டையிலேயே றுவாண்டா, புருண்டி நாடுகளின் படைகள் தலையிட்டுள்ளன.

இந்தச்சண்டைகாரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் பலகோடி பெறுமதியில் நிலங்கள்

சென்னை. ஒக். 24

தஞ்சை, நெல்லை, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஜெயலலிதா, சசிகலா ஆகியோர் 500 ஏக்கர் நிலத்தை வாங்கி உள்ளதாக பொலீஸார் கூறினர்.

ஜெயலலிதா பதவியில் இருந்த போது அவரும், சசிகலாவும் பல கோடி மதிப்புள்ள சொத்துக்களை வாங்கிக் குவித்துள்ளதாக சசிகலா ஊழல் சொத்துப்பற்றி தினசரி பல்வேறு தகவல்கள் கிடைத்து வருகின்றன

தஞ்சை மாவட்டத்தில் 50 ஏக்கர் நிலம் வாங்கி உள்ளனர். நெல்லை மாவட்டம் சேரன்மாதேவியில் 200 ஏக்கரும், செங்கல்பட்டு மாவட்டத்தில் ஊத்துக் கோட்டையில் 250 ஏக்கர் நிலமும் வாங்கி உள்ளதாக இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இந்தத் தகவலை வைத்து அதிகாரிகள் நேரில் சென்று விசாரித்து வருகிறார்கள். இந்த நிலம் யாருடையது? எவ்வளவு மதிப்பில் வாங்கப் பட்டுள்ளது? யார் பெயரில் வாங்கி உள்ளனர்? என்று சப்-ரெஜிஸ்திரார் அலுவலகங்களில் சென்றும் அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-150)

## காந்தியின் கையெழுத்துப் பிரதிகள் ஏலத்தில்!

சென்னை ஒக். 24

அண்மையில் சென்னையில் கண்டுபிடிக்கப்பட்ட மகாத்மா காந்திக்குச் சொந்தமான அரிய கையெழுத்துப் பிரதிகளின் திரட்டு ஒன்று லண்டனில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

காந்தி அடிகளின் சொற்பொழிவுகள், அவர் எழுதிய கட்டுரைகள் ஆகியன இத் திரட்டில் அடங்குகின்றன.

காந்தி மகானின் கடைசி 6 மாதகால வாழ்க்கை பற்றிய விவரங்களை வெளியிடுவதான இந்த ஆவணங்கள் இந்தியாவின் சுதந்திரத்திற்கு வழிகோலிய குழப்பமும் கொந்தளிப்பும் நிறைந்த பல வாதங்களுக்கு ஆவண ரீதியான பல சான்றுகளை வழங்குவதாக அமைகின்றன.

அண்ணல் காந்தியின் சேவகராக பணியாற்றிய வி. கல்யாணன் என்பவரால் இத்தனை நாள்களும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த இந்தக் கையெழுத்துப் பிரதிகளின் திரட்டு அடுத்த மாதத்தில் லண்டனில் ஏலத்தில் விடப்படும். (இ-10)

## உலக அரங்கில்

லஞ்ச ஒழிப்பு பொலீஸுக்கு ஏராளமான தகவல்கள் கிடைத்து வருகின்றன. இதனால் லஞ்ச ஒழிப்பு பொலீஸார் தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் பல்வேறு இடங்களுக்கும் சென்று விசாரித்து வருகிறார்கள்.

இதுபற்றி லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரி கூறியதாவது-:

### தென் ஆபிரிக்காவில்

## யானைகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு

ஜொகனர்ஸ்பேக் ஒக். 24

தென் ஆபிரிக்க அரசு காட்டு யானைகளுக்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

யானைகளின் பெருக்கம் வனப்பகுதிப் பயிர்கள் மற்றும் பலவகைப் பசுஞ் செடிகளின் அழிவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

யானைகளுக்கான குடும்பக் கட்டுப்பாட்டு மருந்து ரப்பர் ரவைகள் மூலம் துப்பாக்கியால் சுடப்பட்டு யானைகளுக்குச் செலுத்தப்படுகிறது. (இ-10)

# சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப ஜெயலலிதா பெருமளவில் முயற்சி

## அவரைக் கூண்டில் ஏற்றுவோம் என்கிறார் கருணாநிதி

“ஊழல் குற்றச் சாட்டுகளில் இருந்து தப்பிக்கொள்ள சட்டத்தில் உள்ள சந்து பொந்துகளை எல்லாம் பயன்படுத்தும் ஜெயலலிதா, கைது செய்யப்பட்டு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும் நிலை விரைவில் வரும்”

தமிழக முதல்வர் கருணாநிதி மதுரையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

கேள்வி:- தனக்கு பினாமியாக எங்கும் சொத்துக்கள் இல்லை. அப்படி சொத்துக்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டால் அதை கருணாநிதியும், சிதம்பரமும் எடுத்துக் கொள்ளட்டுமே என்று ஜெயலலிதா கூறியுள்ளாரே?

பதில்:- சசிகலா பெயரில் உள்ளஎல்லாச்சொத்துக்களும் ஜெயலலிதாவின் சொத்துக்கள்தான். சசிகலாவை உடன்பிறவாச் சகோதரி என்றும் உயிர்த்தோழி என்றும் கடந்த 6 ஆண்டுகளாக ஜெயலலிதா சொல்லி வந்துள்ளார். தற்போது திடீர் என்று எனக்கும் சசிகலாவுக்கும் இடையே உறவு இல்லை என்று கூறுகிறார். இதை யாரும் நம்ப முடியாது. இவர்களுக்கிடையே வியாபாரத் தொடர்பு இன்றும் உள்ளது. ‘‘சசி எண்டர்பிறைசஸ்’’, ‘‘ஜெயா பப்ளிகேஷன்ஸ்’’ போன்ற பல நிறுவனங்களில் இருவரும் பங்குதாரர்களாக உள்ளனர். வாக்காளர் பட்டியலில் கூட சசிகலா, சுதாகரன் ஆகியோரின் விலாசங்கள் ஜெயலலிதா வசிக்கும் ‘‘போயஸ் கார்டன்’’ எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

தாம் செய்த ஊழல், இலஞ்ச லாவண்யத்தை மறைக்க பாதுகாப்புக் கவசமாக சசிகலாவை ஜெயலலிதா பயன்படுத்துகிறார். அவர் தன்னைப் பாதுகாக்க யாரையும் காட்டிக்கொடுக்கக் கூடியவர்.

சாதாரணமாக கெசட் கடை வைத்து கெசட்டை வாடகைக்கு விட்டு வாழ்ந்து நடத்திய சசிகலாவுக்கு எப்படி இவ்வளவு கோடிக்கணக்கான பணமும், இத்தனை சொத்துக்களும் வந்திருக்க முடியும். எல்லாம் ஜெயலலிதா சேர்த்து வைத்த சொத்துதான்.

கேள்வி:- என்மீது கூறப்படும் குற்றச் சாட்டுகள் எதுவுமே உண்மையில்லை. என்னை கைது செய்ய வேண்டும் என்பதற்காக கருணாநிதியும், சிதம்பரமும் போட்டி போட்டுக்கொண்டு இது போன்று நடந்து கொள்வதாக ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

பதில்:- மனோகரா படத்தில் கூட வசந்தசேனை இப்படித்தான் சொல்லுவாள். அந்த வசனத்தைத்தான் திருப்பிச் சொல்ல வேண்டும்

கேள்வி:- தனது 5 ஆண்டு கால ஆட்சியில் நடந்த தவறு எதுவுமே தனக்குத் தெரியாது என ஜெயலலிதா சொல்லியிருக்கிறாரே?

பதில்:- வாய்விட்டுச் சிரிப் [illegible] [illegible] மக்களை ஏமாளிகள் என்று சொல்லி மறுபடியும் ஏமாளிகளாக்க ஜெயலலிதா நினைக்கிறார்.

கேள்வி:- ஊழல் செய்து ஜெயலலிதாவும், அவரது அமைச்சர்களும் சேர்த்த சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுப்பீர்களா?

பதில்:- சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதைத் தான் செய்து வருகிறோம்.

கேள்வி:- ஒரு அதிகாரி என்ன, நூறு அதிகாரிகள் வந்தாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என ஜெயலலிதா கூறியிருக்கிறாரே. நேரடி விசாரணை நடத்தி அவர் கைது செய்யப்படுவாரா?

பதில்:- ஜெயலலிதா சட்டத்தில் உள்ள சந்து பொந்துகளைப் பயன்படுத்துகிறார். அவையும் கண்டு பிடிக்கப் பட்டுஅவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும் நிலை விரைவில் வரத்தான் போகிறது. (இ-150)

## யாழ் - நல்லூர் அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்களின் கூட்டம் பின்வரும் ஒழுங்குகளில் நடைபெறும் என்று கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. வ' தானையா அறிவித்துள்ளார்.

★ யாழ். கோட்டம்:- இன்று வியாழக்கிழமையாழ். கன்னியர்மடம் ம. வியில்.

★ நல்லூர்க் கோட்டம் நாளை யாழ். இந்து மகளிர் கல்லூரியில்.

(உ)

## திருவிழாவுக்கு ஊரடங்கு தளர்வு

ஊர்காவற்றுறை, ஒக்.24

காரைநகர் மணற்காடு அம்மன் கோவில் மானம்புத் திருவிழா திங்கட்கிழமை இரவு வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் இத்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

இதற்கு வசதியாக ஊரடங்கு உத்தரவு அன்று மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை நீக்கப்பட்டிருந்தது.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர் கடற்படையினருடன் கலந்துரையாடி ஊரடங்கு தளர்வுக்கு ஏற்பாடு செய்யப் பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மீட்புப் படை அணிகளுக்கு
# முதல் நாளிலேயே நேர்ந்த கதி!

முல்லைத்தீவு படை முகாம் மீது விடுதலைப் புலிகளின் அதிரடித்தாக்குதல் ஆரம்பித்து சுமார் நான்கு மணி நேரம் கழித்து — ஜூலை 18 ஆம் திகதி காலை பொழுது விடியத் தொடங்கியது.

முகாமின் கணிசமான பகுதி புலிகள் வசம் வீழ்ந்த நிலையில் முகாமின் கட்டடப் பகுதிகள் சேதங்களுடன் அப்படியே இருந்தன.

அப்போதுதான் விமானப் படையின் எம். ஐ. 24 ரக ஹெலிக் கொப்டர்களும், புக்காரா குண்டு வீச்சு விமானங்களும், கிபிர் தாக்குதல் ஜெட் விமானங்களும் முல்லைத்தீவு முகாம் பகுதி மீது வட்டமிடத் தொடங்கின.

ஆனால் அவற்றுக்கு ஒரு சிக்கல். முகாமிற்குள் படையினர் எங்கு இருக்கின்றார்கள்? எங்கிருந்து விலகி விட்டார்கள்? எங்கு ஒளிந்திருக்கின்றார்கள்? — என்பவை குறித்து தெளிவான தகவல் ஏதும் இல்லை. முகாமுக்குள் இருக்கும் கட்டடங்களைத் தாக்கப் போய், அதற்குள் அரசுத் துருப்புகள் பதுங்கியிருந்தால், தமக்குத் தாமே மண் அள்ளிப் போட்டதாகி விடாதா? ஆகவே முகாமிற்கு மேல் வட்டமிட்ட தாக்குதல் விமானங்கள் முகாமைக் குறி வைக்கவில்லை. அது போல முகாமிலிருந்து தப்பியோடிய படையினர் முகாமுக்கு வெளியே பதுங்கியிருக்கக் கூடும் எனக் கருதும் இடங்கள் மீதும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படவில்லை.

முகாமுக்கு வெகு தூரம் அப்பால் புலிகளின் நகர்வு இருக்கக் கூடும் எனக் கருதப் பட்ட இடங்களின் மீதே சகட்டு மேனிக்குக் குண்டுத் தாக்குதல்களை நடத்தி விட்டு தங்கள் தளங்களுக்கு விமானங்களும், ஹெலிகளும் திரும்பின.

இது முகாமைக் கைப்பற்றி, முகாமுக்குள் தங்களுக்குத் தேவையான வேலைகளைச் செய்து கொண்டிருந்த புலிகளுக்கு வாய்ப்பாகி விட்டது.

★ ★ ★

### தளபதிகளின் திட்டம்

இதற்கிடையில் —

18 ஆம் திகதி விடியும் வேளையில் —

முல்லைத்தீவு முகாமை புலிகளின் பிடியிலிருந்து! விடுவிப்பதற்கான ''மும்முனைத் தாக்குதல் நடவடிக்கை'' திட்டத்தை ஆனையிறவு முகாமிலிருந்தபடி அவசர அவசரமாக முப்படைத் தளபதிகளும் தயாரித்து முடித்திருந்தனர்.

அதன்படி —

கடல்வழியாக ஒரு மீட்பு அணி முல்லை முகாம் கடலோரப் பகுதிக்குள் ஊடுருவி தரையிறங்க வேண்டும். இது கடல் முனை நடவடிக்கை.

ஆதே சமயம் மற்றொரு மீட்பு அணி ஹெலிக்கொப்டர் மூலம் முல்லை முகாமுக்குச் சற்றுத் தள்ளி — விடுதலைப் புலிகள் எதிர்பாராத ஓரிடத்தில் — அதேசமயம் முல்லை முகாமிலிருந்து அதிக தூரத்தில் இல்லாத ஓரிடத்தில் — தரையிறங்குவது. இது ஆகாய வழி நடவடிக்கை.

இவ்வாறு தரையிறங்கிய மீட்பு அணி தரைவழியாக முல்லை முகாம் நோக்கி முன்னேறி, முகாமிலிருந்து தப்பி ஓடி, திக்குத் திசை தெரியாமல் பிரிந்து கிடக்கும் படை அணிகளையும் காப்பாற்றி ஒன்று சேர்ந்து, முகாமை மீட்பது இது தரைவழி நடவடிக்கை.

இது தான் முப்படைத் தளபதிகள் ஆரம்பத்தில் தயாரித்த மும்முனைத் தாக்குதல் திட்டம்.

### கடல்வழித் தாக்குதல்

கடல்வழித் தாக்குதல் திட்டத்திற்குத் தேவையான துருப்புகளை யாழ்ப்பாணத்தில் திரட்டுவது என முடிவு செய்யப்பட்டது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் அச்சமயம் தரித்து நின்ற வர்த்தகக் கப்பல் ஒன்றில் துருப்புகளை ஏற்றி, அக் கப்பல் மூலம் அவர்களை சுமார் இருபது மைல் தூரம் கொண்டு சென்று, ஆழ் கடலில் வைத்து கடற்படையின் தரையிறங்கு கப்பல் ஒன்றுக்கு மாற்றுவது என்றும்—

பின்னர் அக் கப்பல் மூலம் முல்லைத்தீவு முகாமை நெருங்கியதும், கடற் கரையில் துருப்புகளை இறக்குவதற்கு வசதியாக அவர்களை டிங்கிகளுக்கு மாற்றுவது என்றும் —

உயர்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மீட்பு நடவடிக்கை ஒன்றுக்காக அவசரமாகக் காரியத்தில் குதித்திருக்கும் ஒரு படை அணியை, கடலில் வைத்து இரண்டு தடவைகள் கலங்களுக்கு கலங்கள் மாற்றுவது எத்தகைய குழப்பத்தை ஏற்படுத்தும் என்பது சாதாரண மக்களுக்கே தெரியும். ஆனால் அதனை மூத்த அதிகாரிகள் சிந்தித்ததாகத் தெரியவில்லை என்கிறார் ஓர் இராணுவ விமர்சகர்.

திருகோணமலையிலிருந்து செயற்பட்ட கடற்படையின் கிழக்குத் தளபதி வைஸ் அட்மிரல் டி. கே. திஸநாயக்காவும், ஸ்ரீலங்கா விமானப் படையின் கிழக்குப் பிராந்தி

**பகுதி - 5**

யத் தளபதியும் மீட்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான வளங்களை திரட்டிக் கொடுப்பதில் முன்னின்றனர்

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து திரட்டப்பட்ட மீட்பு அணி எதுவும் 18 ஆம் திகதி இரவு முடியும் வரை முல்லைத்தீவுக் கடலை எட்டவில்லை.


### ஆபத்து காத்திருந்தது

எனினும் திருகோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து புறப்பட்டு வந்த அதிவேகத் தாக்குதல் படகுகளும், பீரங்கிப் படகுகளும் முகாமின் கடற்கரையோரப் பக்கமாக முகாமை நெருங்க முயன்றன.

ஆனால் அங்கு அவர்களுக்கு ஆபத்து காத்திருந்தது.

முல்லை முகாமின் தாக்குதலுக்கு உள்ளான படைகளுக்கு கடல்வழியாகக் கிடைக்கக் கூடிய உதவிகளை முறியடிப்பதற்காக முகாமின் கடற்கரையோரப் பகுதியில் கடற்புலிகளின் நூற்றுக் கணக்கான படகுகள் கடற்படைப் படகுகளை எதிர் பார்த்த வண்ணம் காத்திருந்தன.

கடற்படைப் படகுகள் கடலில் தென்படத் தொடங்கியதும் கடற் புலிகளின் படகுகள் அவற்றை நோக்கி சீறிப் பாய்ந்து வரத் தொடங்கின. அது மட்டுமல்லாமல் முல்லை முகாமின் கடற்கரையோரப்




1 - கடற்புலிகளின் தாக்குதல் அணி இவ்வழியாகத்தான் முகாமுக்குள் நுழைந்தது.

2 - ஹெலி மூலம் மீட்புப் படை அணிகள் அலம்பிலில் தரையிறங்கின.

3 - ''ரணவிரு'' கப்பல் தகர்க்கப்பட்ட கடற் பகுதி.

1 - 4 புலிகளின் தளம்.

பிரதேசத்தையும், அதை அண்டிய கடற்கரைப் பிரதேசத்தையும் புலிகள் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் அங்கிருந்தும் ஆழ் கடலிலிருந்து கரை நோக்கி விரைந்து கொண்டிருந்த கடற்படைத் தாக்குதல் படகுகளை நோக்கி மோட்டார், பீரங்கி மற்றும் துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனால் முகாமின் கடற்கரையோரப் பகுதியைச் சென்றடையும் தமது திட்டத்தைக் கடற்படைப் படகுகள் கைவிட்டன. கடற்புலிகளின் கடும் எதிர்ப்பு இருப்பதால் முகாமை நெருங்காமலேயே தாங்கள் பின் வாங்குவதாக கடற்படைப் படகுகள் தமது தலைமையகத்துக்கு அறிவித்தன.

இவ்வாறு முதல்நாள் மேற்கொள்ளப்பட்ட கடல் வழி [illegible] போயிற்று. மறு புறத்தில்

அத்தகைய பரந்த பிரதேசம் முழுவதிலும் மீட்புப் படை அணிகள் வந்திறங்கும் போது அவற்றை எதிர்ப்பதற்கு ஆயத்தமாக தமது தாக்குதல் அணிகளை எல்லா இடங்களிலும் வைத்திருக்கக் கூடிய ஆட்பலமோ மற்றைய வசதிகளோ புலிகளிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

இதனால் அலம்பில் பகுதியில் மீட்பு அணிகள் முதலில் வந்திறங்கிய போது பெரிய எதிர்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால்

வான் வழியாகத் தரையிறங்கி, தரை வழியாக முன்னேறி முகாமை மீட்கும் திட்டம் ஓரளவு செயற்படுத்தப் பட்டது.

### துருப்புகள் தரையிறக்கப்பட்டன

வாழைச்சேனைப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்த இரண்டாவது விசேட படையணி பட்டாலியனை (2SF) சேர்ந்த சுமார் 220 படையினர் இந்த மீட்புப் பணிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தமது இராணுவ சேவைக்காக பலவகையிலும் பாராட்டப்படுகின்ற வீரரான லெப்டினன்ட் கேணல் பஸ்லி லாபீர் இந்த படை அணிக்கு தலைமை வகித்தார்.

ருசியத் தயாரிப்பு எம். ஐ. 17 ஹெலிகள் லாபீரின் படை அணியை ஏற்றிச் சென்று, முல்லைத்தீவு முகா

**தொகுப்பு: கவி**

முக்கு தென்புறமாக—முகாமிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அலம்பில் பகுதியில் தரையிறக்கின.

### ஆபத்துகளுக்கு மத்தியில் துணிச்சலான காரியம்

பெருத்த ஆபத்துகளுக்கும் மத்தியில் — துணிச்சலாக — இந்த ஹெலிகளை விமானப் படை விமானிகள் யுத்த களப் பகுதியில் தாழப் பதிந்து துருப்புகளை அப்பகுதியில் தரையிறக்கியதாக இராணுவ விமர்சகர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

மீட்புப் படை அணிகள் முல்லை முகாமிற்கு நெருக்கமான இடத்தில் அல்லாமல் சற்றுத் தொலைவான இடத்திலே ஹெலிகள் மூலம் கொண்டு வரப்பட்டு தரையிறக்கப்படலாம் என புலிகள் எதிர்பார்த்திருந்தாலும் கூட —

குறுகிய நேரத்துக்குள் புலிகள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டார்கள். அவர்களின் தாக்குதல் அணிகள் விரைந்து சென்று அலம்பிலில் தரையிறக்கப்பட்ட மீட்பு அணிகளைச் சுற்றி வளைத்துக் கொண்டன.

அச்சமயம் மீட்பு அணியின் மற்றொரு தொகுதினரை அலம்பில் பகுதியில் தரையிறக்குவதற்காக இரண்டாவது முறையாக வந்த ஹெலிக் கொப்டர்கள் புலிகளின் வேட்டுக்களுக்கு இலக்காகின.

இரண்டு எம். ஐ 17 ரக ஹெலிகள் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்தன. எனினும் மீட்பு அணிகளுடன் சென்ற அந்த ஹெலிகள் அவர்களைத் தரையிறக்காமலேயே ஏற்பட்ட சேதங்களுடன்— தளத்துக்கு பாதுகாப்பாகத் திரும்பி வந்து சேர்ந்தன.

முதலில் ஹெலிகளில் கொண்டுவரப்பட்ட மீட்புப் படை அணிகள் ஹெலிகள் பாதுகாப்பாக வந்திறங்கியதால் சிக்கல் ஏதுமின்றி தரை இறங்கி விட்டன.

ஆனால் அடுத்த தடவை ஹெலிகள் எஞ்சிய மீட்புப் படை அணியினரை ஏற்றி வந்தபோது அவற்றை நோக்கி புலிகள் தாக்கியதால் எஞ்சிய மீட்புப் படை அணியினரை இறக்காமலேயே ஹெலிகள் திரும்பிவிட்டன.

இதனால் முதலில் தரையிறங்கிய மீட்பு அணி, தொடர்ந்து மிகுதித் துருப்புகள் வந்து சேராத நிலையில் —மிகக் குறைந்த எண்ணிக்கையினராக நின்று — பெரும் தொகையான புலிகளுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எனினும் அவர்கள் பெரு வீரத்துடன் களத்தில் போரிட்டதாக சிங்கள இராணுவ விமர்சகர்கள் கூறுகின்றனர்.

18 ஆம் திகதி இரவு இருள் பரவத் தொடங்கிய போது இந்த மீட்புப் படை அணியின் தளபதி லெப்டினன்ட் பஸ்லி லாபீர் உட்பட 36 பேர் உயிரிழந்திருந்தனர். அறுபது பேர் வரை படுகாயமடைந்திருந்தனர்.

இந்த மீட்பு அணி முற்றாக அழிக்கப்பட்டு விடுமோ என்ற எண்ணம் தலை தூக்கத் தொடங்கிய வேளையில் — இருள் சூழத் தொடங்கிய சமயத்தில்— ஸ்ரீலங்கா விமானப்படையின் விமானிகள் தமது உயிரையும் பணயம் வைத்துக் கொண்டு இரண்டாவது தொகுதி மீட்பு அணியினரை வெகுசாமர்த்தியமாக— சாதுரியமாக — முதலாவது மீட்புப் பணியினர் இருந்த இடத்தில் கொண்டு போய் இறங்கினர். அத்துடன் இருளுக்கு மத்தியில்— காயமுற்றிருந்த முதலாவது தொகுதி மீட்புப் படையினரில் உடனடி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்தவர்களையும் — ஏற்றிக் கொண்டு தளத்துக்குத் திரும்பினர்.

அதேசமயம்—

முல்லைத்தீவு முகாமுக்குள் நுழைந்த புலிகளின் தாக்குதல் அணிகள் முதல் நாள் மதியத்துக்குள்ளாகவே முகாமின் முக்கிய பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன.

தாக்குதல் ஆரம்பித்த முதல் நாள் - காலை விடிந்ததின் பின்னர் - முகாமுக்குள் நடந்தவை குறித்து வெளியான தகவல்களை நாளைய உதயனில் பார்ப்போம்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் பற்றி முன்னரே எச்சரிக்கப்பட்டதா?

பூநகரி முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் போன்று முல்லைத்தீவு முகாம் மீதும் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தி முகாமை அழிப்பதற்கு புலிகள் திட்டம் தீட்டி வருகிறார்கள் என்ற—விரிவான—உளவு அறிக்கை ஒன்றை முகாம் தாக்கப்படுவதற்கு சரியாக இரண்டு வாரங்களுக்கு முன்னர்-ஜூலை 5 ஆம் திகதியே- நாட்டின் முக்கிய புலனாய்வுப் பிரிவின் தலைவருக்கு அப்பிரிவின் இரண்டாவது நிலை அதிகாரி தெரிவித்து விட்டாராம்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத் தகவலை வெளியிட்டிருக்கின்றது

வழமையான ஊகச் செய்திகளின் அடிப்படையில் இல்லாமல்-

முக்கிய தகவல்களின் அடிப்படையில் இந்த எச்சரிக்கைத் தகவலை அந்த இரண்டாவது நிலை அதிகாரி தெரிவித்ததாகவும்-

ஆனால் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் அதனை உதாசீனம் செய்து நடந்து கொண்டார் என்றும்-

புலனாய்வுப் பிரிவின் உள் ஆட்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புலனாய்வு அதிகாரியின் அசமந்தப் போக்குக் குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கடும் சீற்றம் கொண்டிருப்பதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தங்கச்சங்கிலி திருடிய சிப்பாய்க்கு 3 மாத கடூழியச் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், ஒக். 24

குடும்பப் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியைத் திருடிய படைவீரர் ஒருவர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டதோடு, 90 நாள் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப பெண்ணின் சங்கிலியும் மீட்கப்பட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவம் கடந்த மாதம் நடைபெற்றது.

சம்பவம் குறித்து அறிய வருவதாவது :-

சம்பவ தினம் குறிப்பிட்ட பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்த படைவீரர் ஒருவர், அப்பெண் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றார்.

அப்பெண்மணியும், குழந்தையும் கூக்குரலிட்டு அழுத போதிலும் அவர் தப்பி ஓடி விட்டார்.

தமது சங்கிலி திருடப்பட்டது குறித்து அப்பெண், அருகில் உள்ள இராணுவ முகாமில் முறைப்பாடு செய்தார். அதனைத் தொடர்ந்து முகாமின் பொறுப்பதிகாரி, சம்பந்தப்பட்ட சிப்பாயைக் கைது செய்து பெண்ணின் தங்கச் சங்கிலியை மீட்டு அவரிடம் ஒப்படைத்தார்.

அதன்பின்னர் இராணுவத்தினர் குறிப்பிட்ட சிப்பாய்க்கு எதிராக விசாரணைகளை நடத்தினர்.

விசாரணைகளைத் தொடர்ந்து அந்தச் சிப்பாய் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, அவருக்கு மூன்று மாதச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இதுவிடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்தமை குறித்து பாதுகாப்புப்படையினரை இப்பகுதி மக்கள் பாராட்டுகின்றனர்.

(அ)

## முஸ்லிம் காங். வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை

கொழும்பு, ஒக். 24

தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனங்களை மீண்டும் பொறுப்பேற்பது தொடர்பான நாடாளுமன்ற வாக்கெடுப்பில் பங்கு கொள்ளுவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் மேற்படி வாக்களிப்பில் கலந்துகொள்ளாது என அக்கட்சியின் பேச்சாளர் அப்துல் சலாம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் வாக்களிப்பில் கலந்து கொள்ளாவிடினும் அரசாங்கத்திற்குப் பாதிப்புகள் எதுவும் ஏற்படாதெனவும் —

தமிழ்க் குழுக்களின் ஆதரவுடன் அரசு தப்பிப் பிழைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-10)

# தீவகப் பாடசாலை ஆசிரியர்களின் கஷ்டங்களை நீக்க வலியுறுத்து

## இராமேஸ்வரன் எம்.பி. நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். நகரப் பகுதியில் இருந்து தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்குச் சென்று பணிபுரியும் ஆசிரியர்களின் பிரச்சினைகள், மிகக் குறிப்பாகப் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. இராமேஸ்வரன் இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலாவுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

தீவுப்பகுதிப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் பலரும் யாழ். நகரத்தில் இருந்தே செல்கின்றார்கள். போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக அவர்கள் பல சிரமங்களையும், கஷ்டங்களையும் எதிர்நோக்குகின்றார்கள். அதேவேளை மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்படுகிறது: — ஆகையால் இது விடயத்தில் உடனடியாகக் கவனமெடுத்து கல்வி பாதிப்படையாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் — என்று இ. இராமேஸ்பரன் அறிவுறுத்தினார்.

இது குறித்துத் துரித நடவடிக்கை எடுத்து, ஆசிரியர்களின் குறைபாடுகளையும், மாணவ ன் கல்வி பாதிப்புறுவதையும் நீக்குவதற்கு ஏற்பாடு செய்வதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி அளித்தார்.

(அ)

# தமிழ்க் குழுக்களிடம் ஆயுதங்கள் பறிப்பு

திருகோணமலை, ஒக். 24

திருகோணமலையில் அண்மையில் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து பொலீஸார் அங்குள்ள ரெலோ. புளொட் ஆகிய இயக்கங்களிடம் இருந்து ஆயுதங்களை மீளப்பெற்றுள்ளனர்.

இந்தச் செயலைக் கண்டித்து ரெலோ அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

''பேரினவாத சக்திகளை திருப்திப்படுத்தும் நோக்குடனேயே திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அமைப்புக்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோ) விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(3)

6 அம்சக் கோரிக்கை குறித்து

# பட்ஜட்டுக்கு முன் அரசுடன் இ. தொ. கா. பேசும்

கொழும்பு, ஒக். 24

தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ்வு கருதி அரசாங்கத்திடம் இ. தொ. கா. சமர்ப்பித்துள்ள 6 அம்சக் கோரிக்கை பற்றி வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்பாக அரசாங்கத்துடன் பேச்சு நடத்த உள்ளதாக இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

ஏற்கனவே இது சம்பந்தமாக அரசாங்கத்துடன் இரு கட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

இனி நடைபெறவிருப்பது இறுதிக் கட்டப் பேச்சுக்கள் என்றும் அவர் கூறினார்.

(இ-3)

# அனலைதீவில் சுகாதார வேலைகள் பலவும் செய்து முடிக்கப்பட்டன

ஊர்காவற்றுறை, ஒக். 24

அனலைதீவில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதி வரை சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிராமங்களில் உள்ள கிணறுகள், நன்னீர் நிலைகளைச் சுத்திகரித்தல், மாணவர்கள். பொதுமக்களுக்கு பூச்சி மருந்து கொடுத்தல், கிராம வீதிகள், பொது இடங்கள், மற்றும் தனியார் வளவுகளை சுத்திகரித்தல் என்பன பிரதான செயற்திட்டங்களாக செய்து முடிக்கப்பட்டன.

அனலைதீவு சுற்றயல் கூறு மருத்துவமனை வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ். பரராசசிங்கம் அவர்களின் வழிநடாத்துதலில் மருத்துவமனை ஊழியர்களும், பொதுமக்களும் அனலைதீவுப் பிரஜைகள் குழு உட்பட அனைத்து பொது ஸ்தாபனத்தினரும் சுகாதார வார நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும் ஊக்கத்துடன் கலந்து கொண்டார்கள்.

சுகாதார வாரத்தின் இறுதி நாளன்று பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்ட கருத்தரங்கும், கலை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் இடம்பெற்றன.

இறுதிநாள் விழாவினை நடத்துவதற்கு வசதியாக இரவு நேர ஊரடங்குச் சட்டத்தினை கடற்படையினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும் தளர்த்தி உதவினார்கள்.

(அ)

அரசு ..

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டுப்படைகளின் தலைமையகம் இடம் மாறியது

இதற்கிடையில் -

18 ஆம் திகதி அதிகாலை முதல் ஆனையிறவு முகாமில் நிலை கொண்டிருந்த முப்படைத்தளபதிகள் 18 ஆம் திகதி முன்னிரவுடன் அங்கிருந்து புறப்பட்டு திருகோணமலையை வந்தடைந்தனர்.

அதுவரை காலமும் அனுராதபுரத்தில் இயங்கிய கூட்டுப்படைத் தலைமையகம், 18 ஆம் திகதி முன்னிரவில் முப்படைத் தளபதிகள் திருகோணமலையில் வந்திறங்கியதும் தற்காலிகமாக திருகோணமலை சீனக்குடாவில் உள்ள விமானப்படைத் தளத்துக்கு இடமாற்றப்பட்டது.

அந்தக் கையோடு முல்லைத்தீவு முகாம் மீட்புப் பணிகளை முப்படைத் தளபதிகளுடன் சேர்ந்து நேரடியாகக் கவனிப்பதற்காக பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் அங்கு வந்து சேர்ந்தார்.

மீட்புப் பணி தொடர்பாக அவர்கள் தொடர்ந்து தீட்டிய திட்டங்கள் என்ன? அவை வெற்றி பெற்றனவா? அவர்களுக்குக் கிடைத்த தோல்விகள் என்ன? — அவற்றையும் நாளைய உதயனில் விரிவாகப் பார்ப்போம்.

மீட்பு நடவடிக்கைக்கு வந்த 'ரணவிரு' பீரங்கிக் கப்பல் தகர்க்கப்பட்ட விவரமும் நாளைய உதயனில்!

(வளரும்)

## மாணவ குடும்ப சுகாதார சேவை பரீட்சை

யாழ்ப்பாணம் ஒக். 24

மாணவ குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும்.

(இ)

## சிறுவர் சமய பாடசாலை

யாழ்ப்பாணம், ஒக். 24

நல்லூரில் சிவானந்தர் சிறுவர் சமய பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். திவ்யஜீவன சங்கத் தலைவர் எஸ். கனகரத்தினம் இந்தப் பாடசாலையில் வித்தியாரம்பம் செய்து வைத்தார்.

(இ-3)

## கிராம சேவையாளர் தரம் உயர்வு

யாழ்ப்பாணத்திலுள்ள கிராம சேவையாளர்கள், கிராம சேவையாளர் தரம் 1 ஆக தரமுயர்த்தப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சை 1994 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது தெரிந்ததே.

(இ-ரி)

# ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணை?

கொழும்பு, ஒக். 24

சந்திரிகா குமாரதுங்காவை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்குவதற்காக அவருக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை (இம்பீச்மண்ட்) கொண்டு வருவதற்கு அரசாங்க எம். பிக்கள் சிலர் நடவடிக்கை எடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் 'நம்நாடு' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டில் மக்களிடையே அதிகரித்து வரும் எதிர்ப்பு உணர்வு, பொருளாதார வீழ்ச்சி நிலை, அமைச்சர்கள் எம். பிக்களிடையே நிலவும் இணக்கமின்மை, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் உள்ள கட்சிகளிடையேயான கருத்து வேறுபாடுகள், தமிழ்க் கட்சிகளிடையே ஏற்பட்டு வரும் அதிருப்தி என்பவற்றைப் பயன்படுத்தி ஆளும் கட்சியில் உள்ள சிலர் குற்ற விசாரணைப் பிரேரணையை கொண்டுவர முயற்சிப்பதாக அரசாங்க உயர் மட்டத்தில் பரவலாகப் பேசப்படுகிறது.

அதேசமயம் அமைச்சர்கள் ஜீ. எல். பீரிஸ், இரத்தின சிறி விக்ரமநாயக்கா, மகிந்த ராஜபக்ச, சிறிமணி அத்துலத்முதலி ஆகியோர் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி தெரிவித்துவருகின்றனர் என்றும்—

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூட ஜனாதிபதியின் போக்கில் வெறுப்படைந்துள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகள் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாய ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறும் விவசாயிகளின் ஒக்ரோபர் மாதத்துக்கான ஒய்வூதியக் கொடுப்பனவு நாளை வெள்ளிக்கிழமை கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

(-3)

## தென்னங்கன்று விநியோகம்

கொழும்புத்துறை, ஒக். 24

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவில் உள்ள குடும்பங்களுக்குத் தென்னங்கன்றுகள் மானிய விலையில் பிரதேச செயலர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன. கிணற்று வசதியும், இடவசதியும் கொண்ட குடும்பத்தினர் தத்தமது பிரிவு கிராம உத்தியோகத்தரின் சிபார்சுடன் 5 எண்ணிக்கை வரையிலான தென்னங் கன்றுகளை ஒவ்வொன்றும் 10/- ரூபா மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(இ-30)

# லிங்க நகரில் குடியமர்ந்த தமிழர் வெளியேற்றப்படுவர்

திருகோணமலை லிங்கநகர் பகுதியில் அரசாங்கத்தின் அனுமதியின்றி தமிழ்க் குழுவினரால் வெளியேற்றப்பட்ட 400 பேர் அந்தக் காணிகளில் இருந்து வெளியேற்றப்பட உள்ளனர்.

இது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டதாக மூத்த பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவர் தெரிவித்தார் என தினமின சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கிரிலோசர் எஞ்சின் (10 H.P 1500 RPM), அரைக்கும் கிரைண்டர் இரண்டு, பெல்ட் செற் சாவிகளுடன் விற்பனைக்குண்டு. மிகவும் நல்ல நிலையில் உள்ளது தொடர்பு: லிங்கம்ஸ் பென்ஸி கவுஸ், பிரதான வீதி, சாவகச்சேரி. (சி-3329)

எழுதுமட்டுவாழ் தெற்கு 8 ஆம் வட்டாரத்தில் பிரயோசன வருமானங்களுடன் கூடிய 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, எழுதுமட்டுவாழ். (சி- 3330)

### ஆண்டு 4

1997 இல் புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை 27-10-96 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தொடர்பு: புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (43303)

### வகுப்புகள்

கேக் ஐசிங், தலையலங்காரம், தையற் கலை, சமையற் கலை, கைப்பணி வேலை, பூ வேலை, கோலம் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: மயூரி ஹோம் சயன்ஸ் அக்கடமி, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (43302)

### புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling-Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (43084)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (43209)

### விவசாய போதினி

ஆண்டு 9 — 12 வகுப்புகளுக்குகந்த விரிவான விவசாய பாடநூல் - படங்களுடன் விலை ரூபா 50/- உடுவில்- கே. கே. எஸ். வீதி நீரஜா அச்சகத்திலும், யாழ்ப்பாணம் கே கே. எஸ். வீதி ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலையிலும் பெறலாம். (43297)

### மணமகன் தேவை

சௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 42 வயதுடைய அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. பொறுப்புகள் அற்ற தாரம் இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: பா. லோகப்பிரகாசம், சு. சே. மா. பி. ப. பணிமனை, யாழ்ப்பாணம். (43309)

### மணமகள் தேவை

இந்து, படித்த, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சர்வதேச ஸ்தாபனம் ஒன்றின் யாழ். கிளையில் பணிபுரியும் 36 வயதுடைய செவ்வாய் குற்றமுடைய நல்லொழுக்கம் மிக்க மகனுக்கு தகுந்த குடும்பத்தில் அழகுள்ள மணப்பெண்ணைத் தேடுகின்றனர். முழு விவரங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். மே/பா இல. 549, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43307)

## கண்ணீர் அஞ்சலி

21-10-96 இல் சிவபதமடைந்த,
எமது சமாச உறுப்பினர்கள்
திரு. சீ. செல்வராசா (செல்வம்)
வர்த்தகர், கொழும்பு
திரு. சீ. பத்மநாதன் (கனடா) ஆகியோரின் தாயார்

**திருமதி செல்லாச்சி சீனிவாசகம்**

அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருவாகிகள்
சமுக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்
(43316)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அவனிக்கு
வரவு:
27 — 11 — 1949

அவனிடம்
விரைவு:
17 — 11 — 1994



**அமரர் சிவகுரு நவரத்தினம்**
(உரிமையாளர் - கனகா பத்திரிகை அகம், திருநெல்வேலி.)
திதி: **24 · 10 · 1996**

நீங்கள் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும் தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துன்புறும்:
மனைவி, மக்கள்,
உற்றார் உறவினர்

''கனக இல்லம்'',
கைதடி கிழக்கு,
கைதடி.
(சி/3326)

## JAFFNA Y. M. C. A.

### வருடாந்தக் கூட்டமும் அங்கத்துவம் புதுப்பித்தலும் பதிவுசெய்தலும்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1996 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு (புதிய நேரம்) பரி. யோவான் கல்லூரியிலுள்ள உவில்லியம் மண்டபத்தில் நடைபெறும். தனித்தனித் தொடர்புகளுக்கு ஏதுவாக எல்லா ஆயுட்கால உறுப்பினர்களும், பூரண உறுப்பினர்களும் தமது பெயர்களையும், விலாசங்களையும் சங்கத்தின் செயலாளருக்கு அறியத்தரவும்.

உப தலைவர்
(43328)

## பசுவைக் காணவில்லை

எனது 9 மாத சினைப்பட்ட பசுவை 22.10.96 அன்று மாலை முதல் காணவில்லை. பசுவின் அடையாளம்: சிவப்பு நிறம்; பட்டி பார்த்த கொம்பன்; நெற்றியில் வெள்ளைச்சுட்டி; தொடையில் K. A. K என்னும் எழுத்துக் குறியிடப்பட்டுள்ள இதனைக் கண்டு பிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஜெயசுந்தரசேகர்
(பஞ்சலிங்கம்)

51, சிவன் புது வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்.
(43327)

## ஜெயந்தி தின விழா



**ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு**
சுவாமிகளின் 68 ஆவது ஜெயந்தி தின விழாவான இன்று (24 - 10 - 96), சுவாமிகளின் அருளும், ஆசியும், வெற்றியும்பெற முருகன் அடியார்கள் வெகு சிறப்பாக இவ் விழாவினை, மானிப்பாய் முருகன் அருள் நிலையத்தில் கொண்டாடுகின்றார்கள்.

- முருகன் அடியார்கள்.
(8918)

## தொழில், தொழிற் பயிற்சி அமைச்சு
## தொழிநுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்

பின்வரும் போதனையினங்கள் 28-10-96 இல் திருநெல்வேலி, கலாசாலை வீதியில் உள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கக் கட்டிடத்தில் ஆரம்பமாகும்.

1. தேசிய கணக்கீட்டுத் தராதரப்பத்திரம் பகல்/மாலை - 2-ம் ஆண்டு
2. வியாபாரக் கற்கைகளிலான தேசிய தராதரப்பத்திரம் (புதிய பாடத்திட்டம்) பொது நிருவாகம் - பகுதிநேரம்/மாலை - 2-ம் ஆண்டு
3. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம்-கணிய அளவீடு-2-ம், 3-ம் ஆண்டு
4. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம்-மின்சாரமும் இலத்திரனியலும்- 2-ம், 3-ம் ஆண்டு
5. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம் - குடிசார் எந்திரவியல் - 2-ம், 3-ம் ஆண்டு
6. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம் - பொறியியல் - 2-ம், 3-ம் ஆண்டு
7. பொறிக்கைப் பணியாளர்தேசிய தராதரப் பத்திரம்-மோட்டார்வாகன வல்லுனர்-2-ம் ஆண்டு
8. பொறிக்கைப்பணியாளர் தேசிய தராதரப்பத்திரம்-மின்னியலாளர்- 2-ம் ஆண்டு
9. பொறிக்கைப்பணியாளர் தேசிய தராதரப்பத்திரம்-பொருத்துதல்- 2-ம் ஆண்டு
10. வானொலி இலத்திரனியல் பொறிமுறை 2-ம் ஆண்டு
11. வர்த்தகம், கைத்தொழில் மற்றும் தொடரும் கல்விக்கான ஆங்கிலத்தில் தேசிய தராதரப்பத்திரம் - பகுதிநேரம்/மாலை - 2 ம் ஆண்டு

அதிபர்

தொழிநுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்
1996. 10. 22
(சி/3328)

உ

## சிவாச்சார்ய அபிஷேக விஞ்ஞாபனம்

சிவாச்சார்ய அபிஷேகம் பெறுபவர்கள்:
**பிரம்மஸ்ரீ ம. தானுநாதசர்மா**
(அர்ச்சகர்: செகராஜசேகர விநாயகர் கோயில், இணுவில்)
**பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வரசர்மா**
(வசந்தன் ஐயர்)
நியாயசிரோன்மணி
பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
அவர்களின் மாணவன்.
(பிரதான அர்ச்சகர்: ஞானவைரவர் கோயில், அரியாலை),
ஞானசெல்வ விநாயகர் கோயில், கொய்யாத்தோட்டம்).
நரசிம்மவைரவர் கோயில், பாண்டியன் தாழ்வு).

இடம்: காயத்திரி பீடம், இணுவில்.
தீட்சாகுரு: சிவஸ்ரீ. நா. மகாதேவக்குருக்கள்
காலம்: இன்று **24 - 10 - 1996**
(ஐப்பசி 8) வியாழன்
காலை 9-00 மணி முதல் 11-00 மணி வரை

இங்கனம்:
திருமதி பா. நாகேஸ்வரி குடும்பத்தினர்.
சிவஸ்ரீ. நா. மகாதேவக்குருக்கள் தம்பதியினர்.
(43299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவை நோக்கி படை முன்னேறுவதற்கு முயற்சி

## விமானங்கள், ஹெலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு, ஒக். 24

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேற்கே பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத போரதீவு பிரதேசத்தை நோக்கி நேற்று முன்தினம் காலை இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெல்லா வெளியில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கு உதவியாக விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட்டன.

விமானக்குண்டுவீச்சு சத்தங்கள் மட்டக்களப்பு நகருக்குக் கேட்டன.

இதே வேளை— இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடங்களை நோக்கி மட்டக்களப்பில் இருந்து ஷெல்கள் ஏவப்பட்டன.

களுதாவளை மூன்றாம் குறிச்சியில் ஹெலிக்கொப்டரில் இருந்து கடுமையான முறையில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மங்களராணி (வயது 16), கனகம்மா (வயது 42) தவமலர் (வயது 32) ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே கிராமத்தில் வயோதிப மாது ஒருவர் துப்பாக்கிச் சூடுபட்டு மரணமடைந்துள்ளார்.

இரு சிறுவர்கள் கல்லாறு ஆஸ்பத்திரியிலும், மேலும் மூவர் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

போரதீவில் பிரசித்தி பெற்ற காளி கோயில் உற்சவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## சங்கானைக் கோட்டத்தில்

யாழ்ப்பாணம். ஒக். 24

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆறாயிரத்து ஐந்நூறு ஆகும்.

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் மாணவர் வரவு வீழ்ச்சி என்ற தலைப்பில் 23-9-96 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில் தவறுதலாக ஆயிரத்து ஐந்நூறு என்று பிரசுரமாகி விட்டது.

நிரந்தர அதிபர்கள் இடம் பெயர்ந்துள்ள பாடசாலைகளுக்கு, அந்தந்தப் பாடசாலைகளில் உள்ள சிரேஷ்ட ஆசிரியர்கள், கடமை பார்க்கும் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதே சரி என்றும் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

(அ)

# உதயன்

## மத்தியஸ்தராக ஐ. நா. சபை

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை பங்களிக்க அனுமதிக்க வேண்டும்.—

இவ்வாறு இலங்கைக்கு நிதி உதவும் நாடுகள் சந்திரிகா அரசு மீது அழுத்தம் போட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண நகரத்தை இராணுவம் கைப்பற்றி, மக்கள் மீளக் குடியேறுவதற்கு முன்னரும் ஐ. நா. வின் பங்களிப்புக் குறித்து வதந்திகள் நிலவின.

குடாநாட்டின் குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை ஐ. நா. சமாதானப் பிரதேசமாக்கி, இராணுவமும் விடுதலைப் புலிகளும் அங்கு நடாமாடுவதைத் தவிர்த்து, வலிகாமம் மக்கள் தமது பிரதேசங்களில் மீளக் குடியமர வகை செய்வதற்கான முன் முயற்சியும் நடைபெற்றது. ஆனால் அது கைகூடவில்லை.

எப்படியோ—

மூன்றாம் தரப்பு ஒன்றின் பங்களிப்பு இல்லாமல் நியாயமான ஒரு தீர்வை எட்டமுடியாத அளவுக்கு இலங்கை இனப்பிரச்சினை மோசமடைந்து விட்டது.

அதனை ஜனாதிபதி சந்திரிகாவும் உணர்ந்து போலும், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துக்குத் தாம் தயார் என்று பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஐ. நாவை அந்த மூன்றாம் தரப்பாக ஏற்றுக் கொள்ள அரசு தயாரில்லை.

ஐ. நாவின் பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலியைச் சந்தித்துப் பேசிய அமைச்சர் கதிர்காமர் கொழும்பில் உள்ள ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அலுவலர்கள் குறித்து அதிருப்தி தெரிவித்திருந்தார்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (யு. என். டி. பி) சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் —

வடக்கு — கிழக்கை புனர்நிர்மாணம் செய்யவும், அங்கு சமாதானத்தை உண்டாக்கவும் முன்னர் திட்டமிடப்பட்டதாகவும்—

ஆனால் சமாதானப் பேச்சுக்கள் மறுவளம் திரும்பியதால் அத்திட்டம் கைவிடப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர் கதிர்காமரின், அரசின் அதிருப்திக்கு அதுவே காரணம்.

அப்படியானால், இலங்கை அரசு மூன்றாந்தரப்பாகத் தனிப்பட்ட நாடு ஒன்றைத் தான் விரும்புகிறது என்பதா அர்த்தம்?

ஆனால் பிரிட்டனும் சரி, கனடாவும் சரி, ஆஸ்திரேலியாவும் சரி, இரு தரப்பும் மத்தியஸ்தராகப் பணிபுரியுமாறு தம்மைக் கேட்டால் மட்டுமே அதற்கு இணங்க முடியும் என்று தெரிவித்து வருகின்றன.

ஆனால் இதில் முன்முயற்சி எடுக்க வேண்டிய அரசாங்கம் வெறும் பேட்டியோடு நின்று விட்டது. செயலளவில் அதனை நோக்கி எதுவுமே நடப்பதாக இல்லை?

இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதில் உள்ள ஆர்வமும், அதற்கான தடல்புடல் விளம்பரங்களும், பிரசாரங்களும் செய்யப்படும் அளவுக்கு தீர்வு ஒன்றைக் காண்பதற்கான செயற்பாடுகளைக் காண முடியவில்லையே!

அமெரிக்காவை தனது பக்கம் வளைத்துக் கொண்டால் அரசியல் தீர்வுக்கு அவசரம் இல்லை என்ற எண்ணமோ என்னவோ...!

# ஒரே தினத்தில் 3,400 பேர் வவுனியா வந்தனர்

கொழும்பு, ஒக். 24

வடக்கில் இருந்து வவுனியாவுக்குச் செல்வதற்கு இருந்த கட்டுப்பாடுகள் நேற்று முன்தினம் நீக்கப்பட்டதை அடுத்து —

மூவாயிரத்து 400 பேர் அன்று வவுனியாவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கடந்த திங்களன்று வவுனியா வந்து, சிவில் நிர்வாக அதிகாரிகளைச் சந்தித்து உரையாடியதை அடுத்தே இக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவுக்குள் வடபகுதிப் பயணிகள் வருவதில் எவ்வித தடையும் இல்லை என்றும் —

வயதுக் கட்டுப்பாடு இருக்காது என்றும் — வவுனியா அரச அதிபர் திரு கே. கணேஷ் தெரிவித்தார்.

கூடுதலான மக்கள் நேற்று முன்தினம் வவுனியாவுக்குள் வந்ததால், வேப்பங்குளம், பூந்தோட்டம் நலன்புரி நிலையங்கள் நிரம்பி வழிந்தன.

(இ-3-4)

# அரசுடன் அஷ்ரப் கருத்து முரண்பாடு

## சமரசத்துக்கு திரைமறைவில் முயற்சி

கொழும்பு, ஒக். 24

அரசாங்க உயர் மட்டத்துக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச் எம். அஷ்ரப்புக்கும் இடையிலேயே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனை சுமுகமாகத் தீர்க்க திரை மறைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று இன்று அல்லது நாளை ஜனாதிபதியை சந்தித்து இது குறித்துப் பேச்சு நடத்தவுள்ளது.

இது தொடர்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் அரசாங்க உயர் மட்டத்துக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் தூது செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ- 3)

# மாவடிவேம்பு சம்பவத்தில் ஏழு படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவடிவேம்பு இராணுவ முகாமிலிருந்து அறுநூறு மீற்றர் தொலைவில் உள்ள மருங்கையடி என்னும் இடத்தில் தங்களைப் பதுங்கித் தாக்கவந்த படையினர் மீது தாங்கள் தாக்குதல் நடத்தியதில் ஏழு இராணுவத்தினர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்,

இச்சம்பவத்தில் படையினரின் இரு சடலங்களைத் தாங்கள் கைப்பற்றியதாகவும் "புலிகளின் குரல்" அறிவித்தது.

தாக்குதலில் காயமுற்ற ஏனைய படையினர் காயங்களுடன் ஓடிவிட்டதாகவும்—

தமது தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும்—

புலிகள் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல் சம்பவத்தில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர் எனவும் —

இருவர் காயமடைந்தனர் எனவும் —

பாதுகாப்பு அமைச்சு கடந்த செவ்வாயன்று அறிவித்திருந்தது தெரிந்ததே.

இத்தாக்குதலில் ஏ.கே.எல். எம்.ஜி -1, ரி 56ரைபிள்கள் -6, மகஸீன்- 26, ஏ.கே.எல். எம்.ஜி. லிங்குகள் 326, ஐ. எம். ரவைகள்- 1,025, ஜக்கட் ஹோல்ஸர்-4 உட்பட பல ஆயுதங்களைத் தாங்கள் கைப்பற்றியதாகவும் புலிகள் அறிவித்தனர்.

(உ-145)

## நாளை

ஐப்பசி 9

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தசி

பின் இரவு 9.22 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பின் இரவு 3.36 வரை.

ராகுகாலம்: 10.33-12.03

சுபநேரம்: 6.03-7.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பக்கச்சார்புத் திட்டம்

மோட்டார் வாகனங்களை வைத்திருப்போர் தமது வாகனங்களை உரிய முறையில் பதிந்தால் அவர்களுக்கு வாராந்தம் குறிப்பிட்டளவு எரிபொருள் வழங்கப்படுமென அதிகாரிகள் தெரிவித்ததை உதயன் பத்திரிகை செய்தியாக வெளியிட்டது.

இந்தத் திட்டம் எல்லோராலும் மகிழ்ச்சியுடன வரவேற்கப்பட்டது. கறுப்புச்சந்தையில் எரிபொருளுக்கு பல மடங்கு கூடுதல் விலை கொடுத்து காசைக் கரியாக்கி கவலையடைந்த, எமக்கு இவ்வறிவித்தல் மன ஆறுதலைத் தந்தது. ஆனால் நடந்தது என்ன?

நாம் எமது வாகனத்தை உரியமுறையில் பதிந்த போதும் பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ளவர்களுக்கு (வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு) எதுவித வாகன எரிபொருள்களும் வழங்கப்படவில்லை. ஆனால் அரணுக்கு உள்ளே வசிப்பவர்கள் வாராந்தம் தமக்குரிய எரிபொருள்களைக் கட்டுப்பாட்டு விலைகளில் பெற்றுக் கொள்கின்றனர்.

அதிகாரிகள் இதுவிடயத்தில் பக்கச்சார்பாக நடந்துள்ளனர் போலத் தோன்றுகின்றது.

வசதி உள்ள சிலர் பாதுகாப்பு அரணுக்குள் சென்று தமது எரிபொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர். என்பது உண்மைதான். எனினும் இது அனைவரும் செய்யக் கூடிய காரியமல்ல. பாதுகாப்பு அரண்களைக் கடப்பதில் உள்ள சிரமங்களும் சோதனைகளும், வேதனைகளும், யாவரும் அறிந்ததே. அதேவேளை அவ்வாறு சென்று பெறுவதானாலும் நாம் பல மைல்கள் பிரயாணம் செய்ய வேண்டும். இதற்கு ஏற்படும் பிரயாணச் செலவு எரிபொருள்களுக்கு கறுப்புச் சந்தையில் செலுத்தும் தொகையை விட விஞ்சிவிடும்.

அரணுக்கு உள்ளே வாழ்பவருக்கு மட்டுமே மின்சாரம் எரிபொருள் என்ற நிலையை மாற்றி, எமது பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்புமூலமோ, கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மூலமோ எமக்குரிய எரிபொருள்களை வழங்க வேண்டும். அப்போது தான் நியாயத்தராசை சமநிலைப் படுத்த முடியும் அதற்குரிய நடவடிக்கைகளை உயரதிகாரிகளே எடுக்க வேண்டும்.

சி. சர்வேஸ்வரன்

கந்தரோடை
சுன்னாகம்.

## வெளிவாரிப் பரீட்சை

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவ—மாணவியருக்கான பரீட்சையை இங்கே நடத்துவதற்கு யாழ். அரச அதிபர் ஆவனசெய்ய வேண்டும் என்று, செல்வி எஸ். சாந்தினி உதயன் "வாசகர் திருமுகம்" பகுதியில் எழுதிய கருத்துக்களை வரவேற்கின்றேன்.

இன்றைய சூழ்நிலைக்கேற்ப அவர் தமது அபிப்பிராயத்தை சக மாணவ, மாணவியரின் சார்பில் வெளிக்காட்டியுள்ளார்.

வாசகர் திருமுகம்

பல மாணவ மாணவியர் எதிர்வரும் மார்கழிமாதத்தில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்றனர். இம்மாணவ மாணவியருக்கு போக்குவரத்து, பாதுகாப்பு வசதியின்மைகளும், அங்கு செல்வதால் ஏற்படவிருக்கும் செலவீனங்களும் கருத்தில் எடுக்கப்பட வேண்டியவையாகும். போக்குவரத்துச் சம்பந்தமான கடந்த கால நிகழ்வுகளை மீண்டும் சம்பந்தப்பட்டவர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

எனவே, இப்பரீட்சைகளை யாழ். நகரில் நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதற்கு கல்வி உயர்கல்வி அதிகாரிகள் யாழ். அதிபருக்கு வேண்டிய ஊக்கம் அளிப்பது மிக அவசியமாகும் என்பதை, ஒரு பெற்றோர் என்ற வகையில் எடுத்துக் கூற விரும்புகின்றேன். செல்வி. சாந்தினி குறிப்பிட்டது போல, இருக்கும்வரை இருந்துவிட்டு, கடைசி நேரத்தில் முயன்றோம்; முடியவில்லை என்று சொல்வதில் அர்த்தமில்லை.

ஆகவே யாழ். அதிபர் இவ்விடயத்தில் ஆவன செய்ய வேண்டியது அவரது பொறுப்பு.

செ. கணேசலிங்கம்

நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டிக்குளம் மோதல் சம்பவம்: விடுதலைப் புலிகள் தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் கடந்த ஞாயிறு காலை ஸ்ரீலங்கா கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து மேலதிக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கடற்படையினரின் படகுகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 9 கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும், 44 படையினர் காயமடைந்ததாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து 'புலிகளின் குரல்'' வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:—

ஞாயிறு காலை 6 00 மணியளவில் பூனைத்தொடுவாய் பகுதியில் அமைந்திருந்த கடற்புலிகளின் 'ராடர்' நிலையம் மீது கடற்படையின் விசேட அதிரடிப்படையினரும் விமானப்படையினரும் சேர்ந்து திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதல் கடற்புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இதன் போது கடற்படையின் 40 அடி நீளம் கொண்ட விசேட வேகப்படகு ஒன்று கடற்புலிகளின் ஆர் பி.ஜி. அணியினரால் தாக்கி அழிக்கப்பட்டது; விமானப்படையினரின் ஹெலி ஒன்று படுசேதமாக்கப்பட்டு பின்வாங்கிச் சென்றது.

எரிந்த படகில் இருந்த பத்துக்கும் மேற்பட்ட ... யினர் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலின் போது புலிகள் தரப்பில் லெப்டினன்ட் கேணல் வாசன் அல்லது தன்ராஜ் (நந்தகோபால் நவந்தராஜ் — திருமலை), கப்டன் ஆனந்தபாபு (சிற்கோபி கிருஷ்ணராதா — யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் கெங்கன் (மார்க்கண்டேயர் கிருஷ்ணராஜா — வல்வெட்டித்துறை) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

இத் தாக்குதலின் போது பல்வேறு ரக இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

— இவ்வாறு 'புலிகளின் குரல்' மேலும் அறிவித்தது.

(உ-145)

விளையாட்டரங்கு

# தென் ஆபிரிக்கா மீண்டும் வெற்றி

இந்தியா, ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா ஆகிய அணிகள் பங்குபற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று தென் ஆபிரிக்க அணி இந்திய அணியை 27 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. கலினன் 106 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலளித்து ஆடிய இந்திய அணி ஒரு சந்தர்ப்பத்தில் விக்கெட் இழப்பின்றி 126 ஓட்டங்களைப் பெற்று மிக நல்ல நிலையில் இருந்தது.

ஆனால் தென் ஆபிரிக்க அணியினரின் சிறப்பான பந்து வீச்சு,சிறப்பான பந்துத் தடுப்பு காரணமாக 222 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இந்தியா இழந்தது.

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களான டெண்டுல்காரும், கங்குலியும் முறையே 64, 56 ஓட்டங்களையும் அசாருதீன் 56 ஓட்டத்தையும் பெற்றனர்.

இந்தப் போட்டித் தொடரில் தென் ஆபிரிக்கா 6 புள்ளிகளையும் இந்தியா 2 புள்ளிகளையும் பெற்றுள்ளன. ஆஸ்திரேலியாவுக்கு இன்னும் புள்ளிகள் எதுவும் கிடைக்கவில்லை. (இ-10)

# எம்மை தடுத்து வைப்பது நீதிக்குப் புறம்பானது!

## யாழ்ப்பாணத்தில் கைதான இளைஞர் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு ஒக். 24

எம்மைக் கைது செய்து தப்பம்புக் காவலில் வைத்திருப்பது நீதிக்குப் புறம்பானது. எமது விடுதலைக்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

தற்போது களுத்துறை சிறைச்சாலையிலும், —

கொழும்பு மகஸின் சிறைச்சாலையிலும், —

வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் — சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ள 64 தமிழ்க் கைதிகள் உண்ணா விரதத்தை ஆரம்பிக்க முன்னர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு கோரி உள்ளனர்.

சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் பின்னர் இவர்கள் யாழ்ப்பாணத்தில் கைதானது தெரிந்ததே.

இவர்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தங்களின் வேண்டுகோளை ஏற்று, விடுதலைப் புலிகளின் பிடியிலுள்ள பிரதேசங்களுக்குச் செல்லாமல் இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு வந்து இயல்பு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தோம்.

நாம் எமது குடும்பத்தினருடன் வாழ்ந்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டோமே தவிர, அரசுக்கெதிரான எந்த நடவடிக்கையின் போதும் கைது செய்யப்படவில்லை.

அதன் பின்னர் பொலீஸார் எம்மை அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து பதினைந்து நாள்களில் விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்தனர்.

### விளக்க மறியலில்

ஆனால் அநுராதபுரம் நீதிமன்றத்தினால் மூன்று மாதங்கள் விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டோம்.

தற்போது இம்மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்னர் மேலும் மூன்று மாதங்கள் விளக்க மறியலில் வைத்து எம்மீது வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக நீதிமன்றில் கூறப்பட்டுள்ளது.

தங்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து தங்கள் வாக்குறுதிகளை நம்பி, நடந்து கொண்ட எமக்கு இழைக்கப்பட்ட கடும் மோசமானதும், நீதிக்குப் புறம்பானதுமான நடவடிக்கை இது ஆகும்

தங்கள் அரசுக்கு ஆதரவளித்த தமிழ் பொது பிரஜைகளாகிய நாங்கள் அனைவரும் அதிருப்தியும், விரக்தியும் ஏமாற்றமும் அடைந்துள்ளோம்.

இந் நிலையில் எம்மில் 44 பேர் களுத்துறை சிறைச்சாலையிலும் 15 பேர் புதிய மகஸின் சிறைச்சாலையிலும் 5 பெண்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையிலுமாக மொத்தம் 64 பேர். எம்மை விடுதலை செய்யும் வரை சாகும் வரை உண்ணாவிரதமொன்றை 20-10-96 இல் ஆரம்பிக்க உள்ளோம்.

அத்துடன் நாம் விடுதலை பெற்று எமது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும்வரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென்பதுடன் அத்தோடு அதுவரை எமது உண்ணாவிரதத்தினை கைவிட மாட்டோம் என்பதனையும் அறியத்தருகிறோம்.

எமக்குப் பின்னர் சிவில் நிர்வாகப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட மேலும் பலர் மேற் குறிப்பிட்ட சிறைகளில் இருப்பதனால் அவர்களும் எம்மைத் தொடர்ந்து சாகும் வரை உண்ணா விரதத்தில் ஈடுபடுவார்களென்பதனையும் அறியத் தருகின்றோம்— என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## ரெலோ உறுப்பினர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 24

வாழைச்சேனை ரெலோ அலுவலகத்தில் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அதை வைத்திருந்த வரதராஜா (19 வயது) என்ற அந்த அமைப்பின் உறுப்பினர் காயமடைந்தார்.

(இ 3)

## அபிவிருத்தி பணிக்கு அதிகாரி

யாழ்ப்பாணம் ஒக். 24

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) எஸ். ரங்கராஜா நேற்று யாழ். செயலகத்தில் தமது பணிகளை ஆரம்பித்துள்ளார்.

யாழ். அரச அதிபருடன் இணைந்து அபிவிருத்தி சம்பந்தமான பணிகளில் இவர் ஈடுபடுவார்,

மாதத்தில் 10 நாள்கள் இவர் இங்கு தங்கி பணியாற்றுவார் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

கைதான—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மார்க் பெர்னாண்டோ, வடு கொடப்பிட்டிய விஜயரட்ன ஆகியோர் முன் எடுக்கப்பட்டது.

இவருக்கு எதிராக வழக்கு தொடுக்க போதிய ஆதாரம் உள்ளதா என்று சட்டமா அதிபர் பரிசீலிப்பதாக அரச சட்டவாதி கோரியதை யடுத்து அடுத்த மாதம் 25 ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டது.

சொந்த..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட ஆயுதங்களுடனேயே அவர்கள் யாழ்ப்பாணம் செல்ல முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தனிப்பட்ட ஆயுதங்களுடன் தாம் அங்கு செல்வது புத்திசாலித்தனம் அல்ல என்று அந்த இரு தலைவர்களும் ஜனாதிபதியிடம் தெரிவித்து விட்டனர் என்று கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

நாவற்குழிச்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தனர் என்றும் —

பின்னர் சில தினங்களுக்கு முன்னர் அங்கு வைத்து கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டனர் என்றும்—

அவர்கள் அடையாளம் காட்டிய இடங்களில் தோண்டியே காணாமற் போன நால்வரினதும் சடலங்கள் எடுக்கப்பட்டன என்றும் தெரிய வந்தது.

இந்த ஒன்பது பேரும் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி என். அருள்சாகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்களை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

மேற்படி நான்கு சடலங்களும் மீட்கப்பட்டதாக நேற்று உதயனில் வெளியான செய்தியில் —

இத்தகைய மர்மச் சம்பவங்கள் குறித்துப் படையினர் பாரபட்சமின்றி விசாரணை நடத்துவர் என்றும் —

படையினர் குற்றமிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

யாழ். குடாநாட்டின் இராணுவத் தளபதி அறிவித்திருந்தார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அச்செய்தியில் யாழ். குடாநாட்டின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா என்பதற்குப் பதிலாக மேஜர் ஜெனரல் றோஹான் தலுவத்த என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. (உ-3)

முன்னைய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணித்தியாலத்தால் முந்தி வைக்கப்பட்டது தெரிந்ததே.

தற்போது நீர்த்தேக்கங்களில் போதிய நீர் தேக்கப்பட்டு விட்டதால் மின்வெட்டு ரத்துச்செய்யப்பட்டுவிட்டது.

ஆனால் அரசாங்கத்தின் நேரமாற்றம் தொடர்ந்து அப்படியே அமுலில் இருந்து வருகிறது.

இதனை பழையபடி பழைய நேரத்துக்கு மாற்றுவதா? அல்லது பழைய நேரத்தில் இருந்து அரை மணித்தியாலத்தை முன்னுக்கு வைப்பதா? அல்லது தொடர்ந்து புதிய நேரத்தையே அனுமதிப்பதா? என்பதைத் தீர்மானிப்பதற்காக மின்சக்தி நீர்ப்பாசன அமைச்சினால் ஏற்படுத்தப்பட்ட குழுவே தற்போது தனது அறிக்கையைச் சமர்ப்பித்து பழைய நேரத்தையே அனுசரிக்குமாறும் —

அல்லது பழைய நேரத்தில் இருந்து அரைமணித்தியாலத்தை முன்னுக்கு வைக்கலாம் என்றும் — சிபார்சு செய்துள்ளது.

மக்களின் நாளாந்த கடமைகளைக் கருத்தில் கொண்டே முன்னைய நேரத்தை அனுசரிப்பதென்ற தீர்மானத்திற்கு இக் குழு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

பிரேத..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அவர்களது உறவினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, பிரேத பரிசோதனையின் பின்னர் கொழும்பில் உள்ள அவர்களது உறவினரான எஸ் நவரத்தினத்திடம் ஒப்படைக்கும்படி பொலீஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

அயலவரான சி.கிருபாமூர்த்தியின் சடலத்தையும் பிரேத பரிசோதனையின் பின் கொழும்பில் எஸ். நவரத்தினத்திடம் ஒப்படைப்பதற்கு கிருபாமூர்த்தியின் மனைவி ஆட்சேபிக்காததை அடுத்து அச் சடலத்தையும் எஸ். நவரத்தினத்திடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது.

நால்வரினதும் சடலங்களும் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையிலிருந்து நேற்று அப்புறப்படுத்தப்பட்டன. அவை பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டு இன்று கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிலரின் வாக்குமூலங்களை இன்று யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி கிருஷாந்தி குமாரசாமி

மலர்வு: 21-10-1977 உதிர்வு: ? ? ?

தற்காலிக பிரிவைக் கூட
விரும்பாமல் தவித்தோம் - இன்று
உன் முற்றான பிரிவை மட்டும்
எப்படித் தாங்கிக் கொள்வோம்?

உன்னுடன் அகால மரணமடைந்த
உன்னுடையவர்களின் நினைவுகளில்
எம் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்.

உயர்தர வகுப்பு மாணவிகள்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

(சி/3337)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 24-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org